ஆண்டறிக்கை
2021

2021 ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு

# இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் தோற்றப்பாடு


**முனைவர். (திருமதி). சுஜீதா ஜெகஜீவன்**

*மேலதிகப் பணிப்பாளர் - பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்*

*இலங்கை மத்திய வங்கி*

# நியதிச்சட்டத் தேவைப்பாடு...




**இது 2021ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி நாணயச்சபையின் 72ஆவது ஆண்டறிக்கையாகும்**

***நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 35:***

...நிதியியல் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய மீளாய்வு மற்றும் அத்தகைய கொள்கைகளையும் வழிமுறைகளையும் தூண்டிய பொருளாதார மற்றும் நிதியியல் சூழ்நிலைகள் என்பன பற்றிய பகுப்பாய்வு மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் நாணயச்சபையானது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குச் சமர்ப்பித்து வெளியிடல் வேண்டும்...

# ஆண்டறிக்கையின் உள்ளடக்கம்...

| | | |
|---|---|---|
| **தொகுதி I** | **பகுதி I** | - பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்<br>புள்ளிவிபரப் பின்னிணைப்பு<br>சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு |
| **தொகுதி II** | **பகுதி II** | - இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் |
| | **பகுதி III** | - ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச் சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள் |
| | **பகுதி IV** | - 2021ஆம் ஆண்டின் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள் |

# பகுதி I - பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்...

1. பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்
2. தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை
3. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு
4. விலைகளும் கூலிகளும்
5. வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்
6. இறைக்கொள்கையும் அரச நிதியும்
7. நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்
8. நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

# இலங்கைப் பொருளாதாரமானது அதன் வரலாற்றில் ஒருபோதும் அனுபவித்திராததொரு மட்டத்தில் தற்பொழுது இடர்பாட்டிற்குள்ளான சூழ்நிலையொன்றிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது...

நெருக்கடியான தாழ்வான மட்டங்களிலுள்ள அலுவல்சார் ஒதுக்குகள்

வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவுகளின் ஸ்தம்பிதம்

உயர்வடைந்துள்ள பணவீக்கம்

செலாவணி வீதத்தின் உயர்ந்த தேய்மானம்

மிகவும் தாழ்ந்த இறை இடைவெளி

செயற்பாடுகளுக்குத் தடையாயமைகின்ற வலு நெருக்கடிகள்

சமூக மற்றும் அரசியல் அமைதியின்மை

2021 மத்திய வங்கி ஆண்டறிக்கையானது நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதற்கமைவாக 2021இன் செயலாற்றத்தினை முக்கியமாக உள்ளடக்குகின்றது...





அத்தியாயம்
1

பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

# 2021 மற்றும் 2022 ஆரம்ப காலப்பகுதிகளில் இலங்கைப் பொருளாதாரத்தின் நிழற்படம்...


*மத்திய வங்கியினதும் அரசாங்கத்தினதும் தீவிரமான பேரண்டப்பொருளாதார கொள்கைத் தளர்த்தல் பொதி 2021இல் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்தது...*

## உண்மைப் பொருளாதாரம் 2021இல் மீட்சியடைந்தது...





தொழிற்படையின் பங்கேற்பு

தொழிலின்மை





பணவீக்கம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது...


| 29.8% | 46.6% | 22.0% |
|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் | உணவுப் பணவீக்கம் | உணவல்லா பணவீக்கம் |
| (கொ.நு.வி.சு - ஏப்-22) | (கொ.நு.வி.சு - ஏப்-22) | (கொ.நு.வி.சு - ஏப்-22) |




## வெளிநாட்டுத்துறை முன்னெப்பொழுதுமில்லாத சவால்களுக்கு முகங்கொடுத்தது...


நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது....




செலாவணி வீதம் *சடுதியாகத் தேய்வடைந்தது...*

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் *வீழ்ச்சியடைந்தன...*




## இறைச் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்தது...

### முக்கிய இறை நிலுவைகள்

(மொ.உ.உற்பத்தியின் சதவீதம்)

| திரண்ட இறை நிலுவை | நடைமுறைக் கணக்கு நிலுவை | ஆரம்ப நிலுவை |
|---|---|---|
| -12.2% (2021) | -7.7% (2021) | -6.0% (2021) |
| -11.1% (2020) | -7.9% (2020) | -4.6% (2020) |

மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)


| 86.9% | 100.6% | 104.6% |
|---|---|---|
| 2019 | 2020 | 2021 |

அரசிறை சரிவுகள் மற்றும் அரச செலவின எல்லை மீறல்கள் என்பன வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மோசமடைவதற்கு வழிவகுத்து அரச படுகடன் இருப்பை உயர்வடையச்செய்தன...




நாட்டிற்கான தரமிடல்கள் குறைக்கப்பட்டிருந்தன...


## நாணயக் கொள்கை இறுக்கமாக்கலானது 2021 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டது...




- முக்கிய கொள்கை வீதங்கள்: ↑ 900 அடிப்படைப் புள்ளிகள் (ஓகத்து - 21 தொடக்கம்)
- நியதிச்சட்ட ஒதுக்கு விகிதம்: ↑ 200 அடிப்படைப் புள்ளிகள்
- தெரிவுசெய்யப்பட்ட கடன்வழங்கல் சாதனங்களின் மீதான உச்ச வரம்பு தளர்த்தப்பட்டது/ நீக்கப்பட்டது

*வரலாற்று ரீதியாக தாழ்வான மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்த சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டன*






ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# முன்னோக்கிய பார்வை: 2022 மற்றும் அதற்கப்பால்

## உண்மைத் துறை

- சரியான வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்வதற்கு பேரண்டப்பொருளாதார உறுதிப்படுத்தல் பொதியொன்று அவசியப்படுகின்றது
- நன்கு இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தல்

## வெளிநாட்டுத் துறை

- பன்னாட்டு நாணய நிதியத்துடனான பொருளாதார சீராக்கச் செயற்றிட்டமொன்றினை நாடுதல்
- வெளிநாட்டுப் படுகடனை மறுசீரமைத்தல்
- குறுங்கால நிதியிடலை நாடுதல்
- மிகையான தளம்பலின்றி செலாவணி வீதம் தொடர்ந்தும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுவதனை நிச்சயப்படுத்தல்
- படுகடனல்லாத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேம்படுத்தல்

**தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒருங்கிணைந்த பேரண்டப்பொருளாதார கொள்கைகள் அவசியப்படுகின்றன**

## இறைத் துறை

- அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகள் மற்றும் செலவின சிக்கனப்படுத்தல் மற்றும் முன்னுரிமையளித்தல் என்பனவூடாக இறைத்திரட்சி
- பொதுப் படுகடன் உறுதிப்பாட்டினை அடைதல்
- அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளில் கட்டமைப்புசார் சீர்திருத்தம்

## நாணய மற்றும் நிதியியல் துறை

- விலை உறுதிப்பாட்டினை மீள்நிலைநிறுத்துவதற்குப் பொருத்தமான நாணயக் கொள்கை வழிமுறைகள்
- நாணய நிதியிடலின் படிப்படியான குறைப்பு
- மத்திய வங்கி ஐந்தொகையினை வலுப்படுத்தல்
- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பேணுகை




அத்தியாயங்கள்
2, 3 மற்றும் 4

தேசிய உற்பத்தி, செலவினம் வருமானம் மற்றும் தொழில்நிலை,


பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

மற்றும்

விலைகளும் கூலிகளும்

# இலங்கைப் பொருளாதாரமானது 2021இல் விரிவடைந்து, 2020இல் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட சுருக்கத்தின் ஆழத்திலிருந்து மீட்சியடைந்தது...

**துறைசார் வளர்ச்சி வீதம் (அ)**




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டமைந்தது (2010 அடியாண்டு)

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தற்பொழுது மொ.உ.உற்பத்தியினை மீளடியிடுகின்ற செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட தரவுகள் விரைவில் கிடைக்கப்பெறும்

**வேளாண்மைத் துறை :**

↑ எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி
விலங்கு உற்பத்தி
தேயிலை வளர்ச்சி
வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி
காடாக்கலும் குத்திகளும்

↓ அரிசியின் வளர்ச்சி
பழவகைகளின் வளர்ச்சி
காய்கறிகளின் வளர்ச்சி

**கைத்தொழில் துறை :**

↑ புடவைகள் மற்றும் ஆடைகளின் தயாரிப்பு
உணவு மற்றும் குடிபானங்களின் தயாரிப்பு
இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு
கட்டடவாக்கம்

↓ கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய தயாரிப்பு
கழிவுநீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு


**பணிகள் துறை :**

↑ நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகள்
மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்
மெய்யாதனச் செயற்பாடுகள்
மனித நல நடவடிக்கைகள்

| பொருளாதார நடவடிக்கை | வருடாந்த வளர்ச்சி வீதம் % | |
|---|---|---|
| | 2020 | 2021 |
| வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி | -2.2 | 2.0 |
| கைத்தொழில்கள் | -6.9 | 5.3 |
| பணிகள் | -1.6 | 3.0 |
| உற்பத்திகள் மீதான மானியங்களைக் கழித்த வரிகள் | -8.1 | 4.9 |
| **மொ.உ.உற்பத்தி** | **-3.6** | **3.7** |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**மொத்த பெறுமதி கூட்டலுக்கான பங்களிப்பு**





- **வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய சகல மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் 2021 காலப்பகுதியில் விரிவடைந்தன**

# முதலீட்டு மற்றும் நுகர்வுச் செலவினம் 2021இல் வளர்ச்சியடைந்த வேளையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி பலவீனமடைந்தது...

- நடைமுறை சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் செலவின அணுகுமுறைக்கமைவாக
  - 2020இல் 4.2 சதவீத சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த மொத்த மூலதன உருவாக்கம் (மொ.உ.உற்பத்தியின் 27.7%) 2021இல் 23.2 சதவீதத்தினால் விரிவடைந்தது
  - பொருட்களுக்கும் பணிகளுக்குமான தேறிய வெளிநாட்டுக் கேள்வி 31.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, ஏற்றுமதிகளைப் பார்க்க பொருட்களதும் பணிகளதும் இறக்குமதிக்கான உயர்ந்தளவிலான வளர்ச்சியைப் பிரதிபலித்தது
  - எனினும், நுகர்வுச் செலவினம் (மொ.உ.உற்பத்தியின் 79.9%) 2020இல் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 9.9 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது

- மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்டிருந்த 18.7 சதவீதத்திலிருந்து 2021இல் 20.1 சதவீதத்திற்கு அதிகரித்தன
- மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்டிருந்த 23.6 சதவீதத்திலிருந்து 2021இல் 23.8 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தன
  - தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2020இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் -1.6 சதவீதத்திலிருந்து 2021இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் -3.9 சதவீதத்திற்கு விரிவடைந்தமைக்கு முதலீடுகளின் வளர்ச்சியிலும் பார்க்க தேசிய சேமிப்புக்களில் காணப்பட்ட ஒப்பீட்டளவிலான தாழ்வான வளர்ச்சி காரணமாயமைந்தது

சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு – முதலீட்டு இடைவெளி
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) (அ)






(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலமைந்துள்ளது (2010 அடியாண்டு)

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# வலுத்துறையிலுள்ள அரசிற்குச் சொந்தமான முக்கிய வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றம் தொடர்ந்தும் நிலையற்ற தன்மையில் காணப்பட்டது...


- சராசரி மசகெண்ணெய் விலை (பிறெண்ட்) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 43.35 உடன் ஒப்பிடுகையில் 2021இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 70.80இற்கு 63.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2008 தொடக்கம் உயர்ந்தளவிலான பிறெண்ட் மசகெண்ணெய் விலை 2022 மார்ச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.
- உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் தொடர்ச்சியான உயர்வு ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலானதோர் இடைவெளிக்குப் பின்னர் 2021இல் முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தைத் தேவைப்படுத்தியது
- ஆண்டு காலப்பகுதியில், உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை அளவுகள் 7.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது




- 2021இல் பொருளாதார நடவடிக்கையின் மீட்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் மின்வலு கேள்வியானது தொடர்ச்சியாக விரிவடைந்தது
- மொத்த மின்வலு உருவாக்கமானது 2021இல் 16,716 ஜிகாவாற்று மணித்தியாலங்களுக்கு 6.4 சதவீதத்தினால் அதிகரித்தது
- ஆண்டு காலப்பகுதியில் தாழ்ந்த செலவுடன் கூடிய நீர் மின்வலு உருவாக்கத்தின் மீதான தங்கியிருத்தலானது அதிகரித்த வேளையில் விலையுயர்ந்த எரிபொருள் எண்ணெய்யின் அடிப்படையிலமைந்த மின் உருவாக்கத்தின் பங்களிப்பானது தொடர்ந்தும் தாழ்வாகவே காணப்பட்டது
- 2021 காலப்பகுதியில் நீர்மின் வலு உருவாக்கத்தின் உயர்ந்தளவிலான பங்களிப்பானது இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தினை ஊக்குவிப்பதற்குத் துணைபுரிந்திருப்பினும் இது ஆண்டு காலப்பகுதியிலும் அதேபோன்று கடந்த காலங்களிலும் உறப்பட்ட இழப்புக்களை எதிரீடு செய்வதற்குப் போதுமானதாகவில்லை


# துறைமுக நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த செயலாற்றமானது நோய்ப்பரவலிற்கு முன்னரான மட்டங்களை விஞ்சிய தொழிற்பாடுகளுடன் 2021இல் தீவிரமாக மீட்சியடைந்தது...




**கொழும்பு துறைமுகத்தின் முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னெடுப்புகள் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் உறுதியாக மேற்கொள்ளப்பட்டன**


- கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணம் 2022 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டது
- 35 ஆண்டுகளுக்கு நீடிக்கின்ற மேற்கு கொள்கலன் முனைக்கோடிக்கான அரசதனியார் மாற்றல் ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது
- 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் கிழக்கு கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்கு கொள்கலன் முனைக்கோடி என்பவற்றின் எதிர்பார்க்கப்படுகின்ற முடிவுறுத்தலைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தின் இயலளவானது 6 மில்லியன் இருபது அடிக்கு நிகரான அலகுகளினால் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

### கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் வருகைகள்




மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை

### துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றம்





*மூலம்* : இலங்கை துறைமுக அதிகாரசபை

**கொழும்பு துறைமுகமானது பன்னாட்டுத் தரங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக உயர்ந்த தரத்தில் தரமிடப்பட்டுள்ளது**

- கொள்கலன் துறைமுக செயலாற்றச் சுட்டெண் - 17வது நிலை
- துறைமுக கப்பல் கப்பலேற்றல் இணைப்புச் சுட்டெண் - 17வது நிலை

## கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் நலத்துறை முன்னிலை வகித்துள்ள வேளையில், கல்வித் துறையானது இணையவழிக் கல்வி முறைமையின் "புதிய இயல்புநிலையினைப்" பின்பற்றியது…

### உலகளாவிய ரீதியில் பாராட்டப்பட்ட தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம்




பாடசாலைகளின் இடைக்கிடையிலான மூடுதல்கள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் சவால்களுக்கு மத்தியில் பொதுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பல்வேறு புதிய முறைகளைப் பின்பற்றுவதனை அத்தியாவசியப்படுத்தின

### கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்ட முன்னெடுப்பின் இலங்கையின் நிலைமை (20.05. 2022இலுள்ளவாறு)

| 1ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் (12 வயதிற்கு மேற்பட்டவர்களில்) | 2ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் (12 வயதிற்கு மேற்பட்டவர்களில்) | பூஸ்டர் (முழுமையாகத் தடுப்பூசியேற்றிக்கொண்டவர்களில்) |
|---|---|---|
| 97% | 82% | 55% |

- நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான மற்றும் காலந்தவறாத இயக்கக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியிருந்த வேளையில் ஒட்டுமொத்த சமூக பொருளாதார நலனோம்புகையின் உச்ச அளவிலான முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சித்தன்மையினை வசதிப்படுத்தியது

- 2021 காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பல்வேறு திரிபுகளின் பரவல்களுக்கு மத்தியில் உலகளாவிய ரீதியில் வரவேற்கப்பட்ட தடுப்பூசியேற்றும் செயற்றிட்ட முன்னெடுப்பானது இலங்கை தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதனை இயலச்செய்திருந்தது














### அதிகரித்துவரும் இணையத்தள பாவனை



# வறுமை ஒழிப்பில் முன்னேற்றமானது ஏற்கனவே பரவலாகக் காணப்படுகின்ற சமமின்மையின் விரிவுப்படுத்தலுக்கு இணையாக உலகளாவிய நோய்பரவலின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தென்படுகின்றது...

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அண்மைய வறுமைத் தரவுகள் மாவட்டங்களுக்கிடையே கணிசமானளவிலான ஏற்றத்தாழ்வுகளுடன் ஏறத்தாழ ஆறு இலங்கையர்களில் ஒருவர் பல்பரிமாணங்களில் ஏழ்மையாகவுள்ளதாகவும் நிறையேற்றப்பட்ட குறிகாட்டிகளின்படி 42 சதவீதமானோர் வறுமையை அனுபவிப்பதாகவும் வெளிப்படுத்துகின்றது...

**பல்பரிமாண வறுமை மட்டச் சுட்டெண்**
**மாவட்ட ரீதியிலான தரவு- 2019**







*மூலங்கள்* : குடியிருப்பாளர் அலகு வருமான மற்றும் செலவின மதிப்பீடு - 2019, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**அரசாங்கம் சனத்தொகையில் பாதிப்படையக்கூடிய பிரிவினரை இலக்காகக்கொண்டு பல்வேறு சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளை முன்னெடுத்த வேளையில் நடைமுறையிலுள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களையும் தொடர்ந்தது...**

**அரசாங்கம் இரண்டு சுற்றுக்களில் பாதிக்கப்படக்கூடிய வீட்டுத்துறையினருக்கு ரூ.5,000 உதவுத்தொகையினை வழங்கியது**

## ரூ. 22.3 பில்.

**வீட்டுத்துறையினருக்கு ரூ.2,000 உதவுத்தொகையொன்றும் வழங்கப்பட்டது**
(அரசாங்கத்தின் எவ்வித உதவிச் செயற்றிட்டங்களின் கீழும் உள்ளடங்காத குழக்களை இலக்காகக் கொண்டிருந்தது)

## ரூ. 11.8 பில்.

**பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்**

| ஆண்டு | திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம் | | சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (அ) | | உலர் உணவு நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பங்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (இ) | பயனாளர்கள் (எண்ணிக்கை) (ஆ) | பெறுமதி (ரூ.மில்லியன்) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
| 2017 | 1,388,242 | 39,707 | 372,407 | 5,408 | 84 |
| 2018 | 1,384,021 | 39,239 | 329,047 | 5,490 | 58 |
| 2019 | 1,800,182 | 44,660 | 300,246 | 5,279 | 105 |
| 2020 | 1,770,086 | 52,434 | 238,034 | 4,761 | வி.கி. |
| 2021 | 1,760,485 | 55,400 | 250,848 | 5,248 | வி.கி. |


(அ) கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக

*மூலங்கள்* : சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
நிதி அமைச்சு

# முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2021இல் தேய்வொன்றினைக் காட்டின...


- முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (2012=100) 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினைத் தொடர்ந்தன
- கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர் =100) அளவிடப்பட்டவாறான முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 74.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தன
- அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016 = 100) அளவிடப்பட்டவாறான, அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன

**2021இல் முறைசாரா தனியார் துறை கூலி விலைச் சுட்டெண்ணின் அசைவு (பெயரளவு)**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**கூலிகள்**




(இ) குறிப்பிடப்பட்டுள்ள பெயரளவு மற்றும் உண்மையான கூலிகளின் மாற்றம் என்பது 2021 மற்றும் 2020 இன் சராசரிக்கு இடையிலான சதவீத மாற்றத்தைக் குறிக்கிறது.
(ஈ) கூலி நிர்ணய சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற முறைசார் தனியார்துறை ஊழியர்களின் கூலிகள்.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பல்வேறு தொழிற்சந்தைக் குறிகாட்டிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் மேம்பட்ட போதிலும் தொழிலாளர் சந்தை உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை எட்டியிருக்கவில்லை...


- **தொழிற்படை 2020இல் பதிவுசெய்யப்பட்ட 8.467 மில்லியனிலிருந்து 2021இல் 8.553 மில்லியனிற்கு அதிகரித்தது.**
- **தொழிற்படைப் பங்கேற்றல் வீதம் 2020இன் 50.6 சதவீதத்திலிருந்து 2021இல் 49.9 சதவீத்திற்குக் குறைவடைந்தது**

  ஆண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் : 71.9% → 71.0%  பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம : 32.0% → 31.8%
- **தொழில்புரியும் குடித்தொகை 2020இன் 7.999 மில்லியனிலிருந்து 2021இல் 8.114 மில்லியனுக்கு அதிகரித்தது.** தொழில்நிலையில் இவ்வதிகரிப்பிற்கு வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் தொழில்நிலையில் அதிகரிப்பு காரணமாயமைந்தது

| தொழில்நிலைப் பங்கு | 2020 | 2021 |
|---|---|---|
| வேளாண்மை | 27.1% | 27.3% |
| கைத்தொழில் | 26.9% | 26.0% |
| பணிகள் | 46.0% | 46.7% |

- **தொழிலின்மை வீதம் 2020இன் 5.5 சதவீதத்திலிருந்து 2021இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது**

## தொழிலின்மை வீதம் (சதவீதம்)




(அ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## தொழிற்சந்தை குறிகாட்டிகள்



தொழிற்படை

8.467 மில். (2020)

8.553 மில். (2021)



பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத குடித்தொகை

8.273 மில். (2020)

8.581 மில். (2021)



தொழிற்படை பங்கேற்பு வீதம்

50.6% (2020)

49.9% (2021)



தொழில்புரிவோர் குடித்தொகை

7.999 மில். (2020)

8.114 மில். (2021)



தொழிலின்மை வீதம்

5.5% (2020)

5.1% (2021)



வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கான புறப்பாடுகள்

53,711 (2020)

121,795 (2021)



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA






அத்தியாயம்
5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

# வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்து, முக்கியமாக வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவடைதலையும் தொழிலாளர் பணவனுப்பல்களில் குறைவடைதலையும் பிரதிபலித்தது…

ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. பில்லியன்)





- நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள், சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 810 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளையும், 2021 ஓகத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர் 787 தொகையுடைய சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீட்டையும் ஐ.அ.டொலர் 784 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் (கடன்கள் உள்ளடங்கலாக) கணக்கு மீதான உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியிருந்தன.
- ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களையும் 2021 யூலையில் முதிர்வடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறித் தீர்ப்பனவையும் முக்கிய வெளிப்பாய்ச்சல்கள் உள்ளடக்கியிருந்தன.

# ஏற்றுமதிகளின் வளர்ச்சியை விஞ்சிய இறக்குமதிகளின் கணிசமான அதிகரிப்பு காரணமாக வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது...

- **வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 24.4% சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 12,499 மில்லியன் கொண்ட உயர்வான பதிவொன்றுக்கு மேம்பட்டன:**
  - அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலிருந்துமான வருவாய்கள் அதிகரித்தன
- **ஏற்றுமதிகளில் அதிகரிப்பு:**
  - ஆடைகள் மற்றும் புடவைகள்(22.9%)
  - இறப்பர் உற்பத்திகள் (33.6%)

  ஆகியவற்றினால் தூண்டப்பட்டது
- **வீழ்ச்சிகள்:**
  - தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண உற்பத்திக்களுக்கான பிளாத்திக் மற்றும் பொருட்கள் (-55.4%)

  ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்டன
- **ஏற்றுமதி அளவுகளின் அதிகரிப்பு ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்தது**




**வர்த்தகப் பற்றாக்குறையானது 2021இல் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தமைக்கு பின்வருவன காரணமாயமைந்தன:**


- உயர்வான பண்ட விலைகள்
- பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்புதல்
- தடுப்புமருந்துகள் போன்ற மருத்துவம் மருந்தாக்கற் பொருட்கள்
- சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்

- **இறக்குமதிச் செலவினம், ஐ.அ.டொலர் 20,637 மில்லியனுக்கு 28.5 சதவீதத்தினால் அதிகரித்தது:**
  - அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலிருந்துமான வருவாய்கள் அதிகரித்தன
- **இறக்குமதிகளில் அதிகரிப்பு:**
  - எரிபொருள் (47.2%)
  - ஆடைகள் மற்றும் பொருட்கள் (31.3%)

  ஆகியவற்றினால் உந்தப்பட்டது
- **வீழ்ச்சிகள்:**
  - வளமாக்கி (-38.9%)
  - மருத்துவம் மற்றும் மருந்தாக்கற்
  - பொருட்கள் (48.2%) ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்டன
- **இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பானது அளவு மற்றும் விலை அதிகரிப்புக்கள் இரண்டின் மூலமும் செல்வாக்குக்குட்பட்டது**


# வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்கும் மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன...

## சென்மதி நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**ஒட்டுமொத்த நிலுவையானது 2020 மற்றும் 2021இல் பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்தது**


### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

2021 : ஐ.அ.டொலர் 3.1 பில் (1.8 மாத இறக்குமதிகள்)

2020 : ஐ.அ.டொலர் 5.7 பில் (4.2 மாத இறக்குமதிகள்)

# இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2021இல் உயர்வடைந்தது...

வெளிநாட்டுப் படுகடன்




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு

**2021இன் இறுதியில் : ஐ.அ.டொலர் 50.7 பில் (மொ.உ.உ 60.0%)**

2020இன் இறுதியில் : ஐ.அ.டொலர் 49.0 பில் (மொ.உ.உ 60.5%)

### வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்

**2021 : ஐ.அ.டொலர் 4.5 பில்**

2020 : ஐ.அ.டொலர் 4.6 பில்


## இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2021இல் உயர்வடைந்தமைக்கு முக்கியமாக பின்வருவன காரணமாயமைந்தன:

- சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட இரு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் கிடைப்பனவு
- வங்காளதேச வங்கி மற்றும் சீன மக்கள் வங்கி என்பவற்றுடன் புதிய இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த ஏற்பாடுகளில் ஈடுபடுதல்
- ஆண்டுகாலப்பகுதியில் நேரடி முதலீட்டுக் கம்பனிகளில் அநேகமானவை கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குடமையாளர் முற்பணங்களையும் பெற்றுக்கொண்டமை மூலம் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பெறுதலில் ஏற்பட்ட அதிகரிப்பு
- நாணய மற்றும் வைப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காரணமாக வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்பு


# மத்திய வங்கி 2021 முழுவதும் பேணிவந்த செலாவணி வீத மட்டத்தில் 2022 மாச்சு தொடக்கம் அளவிடப்பட்ட சீராக்கமொன்றிற்கு இடமளித்தது...

- உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய திரவத்தன்மை காரணமாக, குறிப்பாக 2021ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியின்போது தேய்வுறுவதற்கான அழுத்தத்துடன் ரூபா சில தளம்பலை வெளிக்காட்டியது
- ஒட்டுமொத்தமாக, 2021ஆம் ஆண்டின் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 747 மில்லியனை வழங்குவதன் வாயிலாக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது
- 2021ஆம் ஆண்டில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் பெரும்பாலும் அடிப்படையாண்டு மட்டத்திற்கு (2017=100) கீழ் காணப்பட்டு இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான போட்டித்தன்மையை எடுத்துக்காட்டியது
- உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் எடுத்துக்காட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவு அழுத்தங்கள் செலாவணிவீத நிர்ணயத்தில் அதிகளவிலான நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்த பின்னர், பாரிய தளம்பல்களை ஏற்படுத்தின

செலாவணி வீத அசைவு - ஐ.அ.டொலரொன்றிக்கான ரூபா




தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 24 - நாணயம் (2017=100)




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி




# அத்தியாயம்
# 6

## இறைக்கொள்கையும்
## அரச நிதியும்

# மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறையானது வரலாற்றிலேயே குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது...


- **பெயரளவு நியதிகளில் அரசிறை 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தபோதிலும், இது மொ.உ.உ இன் சதவீதமாக 2020இன் 9.1 சதவீதத்திலிருந்து 2021இல் 8.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது**

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை மற்றும் வரி அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கு

- தொடர்ச்சியான குறைந்த வரி அமைப்பு
- வெளிநாட்டுத் துறை அழுத்தங்களை இலகுபடுத்துவதற்காக விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள்
- பொருளாதாரத்தின் மிதமான வளர்ச்சி

என்பன காரணங்களாக அமைந்தன

## அரசிறையின் உள்ளமைப்பு - 2021





## அரசிறையின் சுருக்கம்

| விடயம் | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|
| ரூ. மில்லியன் | | |
| வரி அரசிறை | 1,216,542 | 1,298,019 |
| வருமான வரிகள் | 268,249 | 302,115 |
| பெறுமதி சேர் வரிகள் | 233,786 | 308,213 |
| கலால் வரிகள் | 321,932 | 306,861 |
| இறக்குமதி தீர்வைகள் | 114,183 | 64,339 |
| ஏனைய வரிகள் | 278,392 | 316,490 |
| வரியல்லா அரசிறை | 151,417 | 159,052 |
| மொத்த அரசிறை | 1,367,960 | 1,457,071 |
| மொ.உ.உ இன் சதவீதமாக (இ) | | |
| வரி அரசிறை | 8.1 | 7.7 |
| வருமான வரிகள் | 1.8 | 1.8 |
| பெறுமதி சேர் வரிகள் | 1.6 | 1.8 |
| கலால் வரிகள் | 2.1 | 1.8 |
| இறக்குமதி தீர்வைகள் | 0.8 | 0.4 |
| ஏனைய வரிகள் | 1.9 | 1.9 |
| வரியல்லா அரசிறை | 1.0 | 0.9 |
| மொத்த அரசிறை | 9.1 | 8.7 |

# மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2020இன் பதிவுசெய்யப்பட்ட 20.2 சதவீதத்திலிருந்து 2021இல் 21.0 சதவீதத்திற்கு அதிகரித்தன…

- மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,041.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.3,521.7 பில்லியனுக்கு ரூ.480.7 பில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன
- மீண்டெழும் செலவினம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,548.4 பில்லியனை விட 2021இல் ரூ.2,747.5 பில்லியனுக்கு அதிகரித்து சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் பேரில் ஏற்பட்ட உயர்ந்த செலவினங்களைப் பிரதிபலித்தது
- மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2020இன் 17 சதவீதத்திலிருந்து 2021இல் 16.3 சதவீதத்திற்கு மிதமடைந்த வேளையில், மூலதனச் செலவினம் மற்றும் கடன் வழங்கல் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதத்தினை விட 2021இல் 4.6 சதவீதத்திற்கு அதிகரித்தன

## அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2021




மூலம்: நிதி அமைச்சு




ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# 2021இல் முக்கிய இறை மீதிகள் நலிவுற்றதுடன் *உள்நாட்டு மூலங்களினூடாக வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுதல் பூர்த்திசெய்யப்பட்டது...*


- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2020இன் 11.1 சதவீதத்திலிருந்து (ரூ.1,667.7 பில்லியன்) 2021இல் 12.2 சதவீதத்திற்கு (ரூ.2,057.9 பில்லியன்) அதிகரித்தது
- நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021இல் மொ.உ.உற்பத்தியின் (ரூ.1,290.4 பில்லியன்) 7.7 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாக விளங்கி 2020இல் அறிவிக்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதத்திலிருந்து (ரூ.1,180.4 பில்லியன்) பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது
- ஆரம்பப் பற்றாக்குறையும் 2020இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதத்துடன் (ரூ.687.4 பில்லியன்) ஒப்பிடுகையில் மொ.உ.உ.இன் 6.0 சதவீதத்திற்கு (ரூ.1,009.5 பில்லியன்) நலிவுற்றது

முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




(அ) நிதி அமைச்சிற்கமைய 2019இற்கான இறைத்துறைப் புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.


*மூலம்:* நிதி அமைச்சு



# மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் 2021இல் ஒழுங்கற்றதொரு மட்டத்திற்கு அதிகரித்தது...


- உண்மை நியதிகளில், படுகடன் குறைப்பு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டிலும் ஏற்பட்ட உயர்வுடன் மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இல் ரூ.2,375.6 பில்லியனுக்கு 22.4 சதவீதத்தினால் அதிகரித்தன
- மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற மத்திய அரசப் படுகடன் 2020 இறுதியின் 100.6 சதவீதத்திலிருந்து 2021இறுதியில் 104.6 சதவீதத்திற்கு அதிகரித்தது

## மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உ இன் சதவீதமாக)




மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## வெளிநின்ற மத்திய அரசப் படுகடன்







# அத்தியாயம் 7

## நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்

# மத்திய வங்கி 2021 ஓகத்திலிருந்து அதன் நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்கத் தொடங்கியது...

## முக்கிய கொள்கை கருவிகள் மற்றும் தொழிற்பாட்டு இலக்கின் அசைவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- 2021இன் முதலரைப்பகுதியில் கொவிட்-19இன் பன்முக அலைகளுக்கு மத்தியில் தொடர்ச்சியான அசாதாரணமான நாணயக் கொள்கை தளர்த்தல்கள் தேவையாக இருந்தது
- திறைசேரி உண்டியல்களின் கணிசமான தொகையினைக் கொள்வனவு செய்தமையின் மூலம் மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நிதியியல் ஆதரவினை வழங்கியது


- குறிப்பாக கேள்வி அழுத்தங்கள் கட்டியெழுப்பப்பட்டமை மற்றும் வெளிநாட்டுத் துறையிலும் நிதியியல் சந்தைகளிலும் காணப்பட்ட அழுத்தங்கள் போன்ற தளம்பல்களின் சில சமிக்ஞைகள் பொருளாதாரத்தில் அவதானிக்கப்பட்டன
- மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் 2021 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து 50 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்தப்பட்டன. நியதி ஒதுக்கு விகிதமும் 2021 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2 சதவீதப் புள்ளியினால் 4.0 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது

- தளர்த்தப்பட்ட இறைக் கொள்கை நிலையுடன் சேர்ந்து வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட நீடித்த அழுத்தங்களுக்கு மத்தியில் பணவீக்கம் விரும்பத்தக்க மட்டத்திற்கு அப்பால் தொடர்ச்சியாக அதிகரித்தமையின் காரணமாக 2021 ஓகத்தில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் 2022இல் மிகத்தீவிரமான நிலையொன்றிற்கு மாற்றமடைந்தன

**இத்தகைய பணவீக்க அழுத்தங்களின் விளைவுகளை எதிர்கொள்வதற்கும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் உயர்வடைவதனை முன்கூட்டியே தடுப்பதற்குமான தேவையினை அடையாளங்கண்டு, மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் 2022 சனவரி தொடக்கம் ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் ஒட்டு மொத்தமாக 850 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன**


# பணவீக்கமானது வழங்கல் பக்க மற்றும் கேள்விப் பக்க காரணிகளினால் உந்தப்பட்டு 2021இல் விரைவடைந்தது…

**ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் அசைவுகள்**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கத்தின் அசைவுகள்**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு) 2021 இறுதியில் 12.1 சதவீதத்திற்கும் 2022இல் ஏப்பிறலில் 29.8 சதவீதத்திற்கும் விரைவுற்றது
- கணிசமான நாணயத் தளர்த்தல்களின் காலம் கடந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், மையப் பணவீக்கமும் 2021இன் பின்னரைப்பகுதியில் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்தது
- மத்திய வங்கியின் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீட்டினால் அளவிடப்பட்டவாறான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் உண்மையான பணவீக்கத்தில் காணப்பட்ட அசைவுகளினால் தூண்டப்பட்டு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்வடைந்து காணப்பட்டன

# இறுக்கமான நாணய மற்றும் திரவத்தன்மை நிலைமைகளை பதிலிறுத்தும் வகையில் சந்தை வட்டி வீதங்கள் அதிகரித்து வருகின்றன...


## திறைசேறி உண்டியல் விளைவுகளினதும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களினதும் அசைவு




| வட்டி வீதம் | 2020 இறுதி | 2021 ஓகத்து 18இல் உள்ளவாறு | 2021 இறுதி | 2022 மே 20 இல் உள்ளவாறு | 2020 இறுதியிலிருந்து 2021 இறுதி வரை | 2021 ஓகத்து 18இலிருந்து இதுவரை | 2021 இறுதியிலிருந்து இதுவரை |
|---|---|---|---|---|---|---|---|
| | % | % | % | % | *அ.பு மாற்றம்* | *அ.பு மாற்றம்* | *அ.பு மாற்றம்* |
| ச.நி.அ.ப.வீ | 4.55 | 5.09 | 5.95 | 14.50 | 140 | 941 | 855 |
| 91-நாள் தி. உ | 4.69 | 5.33 | 8.16 | 24.07 | 347 | 1,874 | 1,591 |
| 182-நாள் தி. உ | 4.80 | 5.34 | 8.33 | 24.69 | 353 | 1,935 | 1,636 |
| 364-நாள் தி. உ | 5.05 | 5.32 | 8.24 | 24.50 | 319 | 1,918 | 1,626 |
| வாராந்த ச.நி.மு.க.வீ | 5.81 | 5.71 | 8.61 | 20.32 | 280 | 1,461 | 1,171 |
| மாதாந்த ச.நி.மு.க.வீ | 5.74 | 5.70 | 8.33 | 13.02 | 259 | 732 | 469 |
| ச.நி.க.வ.வீ | 10.29 | 9.45 | 9.87 | 10.35 | -42 | 90 | 48 |
| ச.நி.பு.க.வ.வீ | 8.38 | 8.09 | 9.48 | 10.73 | 110 | 264 | 125 |
| ச.நி.வை.வீ | 5.80 | 4.77 | 4.94 | 5.52 | -86 | 75 | 58 |
| ச.நி.நி.வை.வீ | 7.14 | 5.67 | 5.94 | 6.84 | -120 | 117 | 90 |
| ச.நி.பு.வை.வீ | 4.93 | 4.99 | 6.45 | 7.68 | 152 | 269 | 123 |
| ச.நி.பு.நி.வை.வீ | 5.08 | 5.15 | 6.67 | 8.06 | 159 | 291 | 139 |

## தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் விரிவடைந்த வேளையில் உள்நாட்டு வங்கித்தொழில் முறைமைகளிலிருந்து அரசிற்கான கடன்வழங்கலும் 2021இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது…


### உள்நாட்டு கொடுகடனின் ஆண்டிற்கான அதிகரிப்பு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

- 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 810.5 பில்லியனால் அதிகரித்தது


### அரச துறைக்கான கொடுகடன் விரிவாக்கம் (ஆண்டிற்கான மாற்றம், ரூ.பில்)




- 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.1,225.2 பில்லியனால் அதிகரித்தது
- வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடன் 2021இல் தொடர்ச்சியாக விரிவடைந்து அவற்றின் நலிவடைந்த நிதியியல் நிலைமைகளையும் வழிவழியாக வந்த பிரச்சனைகளையும் பிரதிபலித்தன


# வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தமையின் காரணமாக 2021இன் பிற்பகுதியில் விரிந்தபண நிரம்பலின் ($M_{2b}$) வளர்ச்சி மிதமடைந்தது...

## விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு - $M_{2b}$ (சொத்துப்பக்கம்)



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## நாணயக் கூட்டுக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA




# அத்தியாயம் 8


# நிதியியல்துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

# 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை மிதமான வேகமொன்றில் விரிவடைந்து…


- வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டமைக்கு வட்டி வருமானத்திலும் வட்டியல்லா வருமானத்திலும் காணப்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் வட்டிச் செலவினங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாயமைந்தன
- வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் விரிவடைந்தமைக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களிலும் முதலீடுகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி பிரதான காரணமாயமைந்தது
- மொத்த செயற்படாக் கடன்களின் விகிதம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் குறைவடைந்தமைக்கு கடன்களிலும் முற்பணங்களிலும் ஒப்பீட்டு ரீதியில் காணப்பட்ட உயர்ந்தளவிலான அதிகரிப்பு காரணமாயமைந்தது
- உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் திரவத்தன்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டமைக்கு சுற்றுலாத் துறையின் மெதுவான மீட்சி மற்றும் குறைவடைந்த பணவனுப்பல் மட்டங்கள், ஏற்றுமதிப் பெறுகைகளின் மெதுவான மாற்றல், அதிகரித்த இறக்குமதிச் செலவினம் மற்றும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன

| | மொத்த செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | | நியதித் திரவச்சொத்து விகிதம் (%) உள்நாட்டு வங்கியியல் பிரிவு | | மூலதனப் போதுமாந் தன்மை விகிதம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| 2021 | 4.5 | ↓ | 33.8 | ↓ | 16.5 | ↔ |
| 2020 | 4.9 | | 37.8 | | 16.5 | |

வங்கித்தொழில் துறைக்கான இலாபத்தன்மை விகிதங்கள்





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி





# 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் செயலாற்றம் மேம்பட்டது...

- கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை கணிசமானளவிலான மேம்பாடுகளைப் பதிவுசெய்தது
- வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் வட்டியல்லா வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் இலபாத்தன்மை அதிகரித்தது
- மொத்த செயற்படாக் கடன் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த போதிலும், யெற்படாக் கடன் விகிதம் இன்னமும் உயர்வாகவே காணப்படுகின்றது
- குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளிற்கு மேலாக ஆரோக்கியமான மட்டங்களில் பேணப்படும் மூலதன மற்றும் திரவத்தன்மையுடன் துறை ஒட்டுமொத்தமாக தொடர்ந்தும் திடமாக காணப்பட்டது





## உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைகக்குவிடும் கம்பனிகளினதும் செயற்படாக் கடன்கள் மற்றும் ஏற்பாட்டுப் பாதுகாப்பு




## உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைகக்குவிடும் கம்பனிகளினதும் இலபாத்தன்மை குறிகாட்டிகள்






ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பல தசாப்தங்களுக்கும் மேலாக, இடம்பெற்றுவந்த பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுடன் **இலங்கைப் பொருளாதாரம்** அதன் இணைத்தரப்பினர்களை **விஞ்சிக்** காணப்பட்ட போதிலும்,

**நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பேரண்டப்பொருளாதார உறுதித் தன்மையினையும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியினையும்** நிச்சயப்படுத்தும் பொருட்டு நாட்டின் **பொருளாதார வாய்ப்புக்களை** மறைத்துள்ள **நிலையான அமைப்பியல்சார் தடைகளை** அவசரமானதொரு முறையில் தீர்க்க வேண்டிய தேவை காணப்படுகின்றது...

# பிரச்சனைகளும் கொள்கைகளும்...

**01** பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதன் மூலமும் தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதனூடாகவும் **உறுதித்தன்மை வாய்ந்த நடைமுறைக் கணக்கு நிலுவையினை** அடைந்துகொள்வது வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்ற தன்மைகளிலிருந்து தோன்றுகின்ற **அதிகரித்தளவிலான பாதிக்கப்படும் தன்மையினை** வென்றுகொள்வதற்கு மிக முக்கியமானதாகும்.

**02** உயர்ந்த வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகள் மற்றும் படுகடன் கொடுப்பனவிற்காக இறை இடைவெளி குறைவாகவிருக்கும் தன்மை என்பனவற்றிற்கு மத்தியில் **வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மையினை** நிச்சயப்படுத்தும் பொருட்டு, முன்னோக்கிய பயணத்தில், வெளிநாட்டு துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மையினை வலுப்படுத்துவதற்குப் **படுகடனை உருவாக்காத வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களைக் கவர்ந்துகொள்வது** அவசியமான தேவையாகவுள்ளது.

**03** கொழும்பு துறைமுக நகரத்தின் **உள்ளார்ந்த நன்மைகளைப்** பொருளாதாரத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அதற்கு **எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை விரைவுபடுத்துவதற்கு** வழிமுறைகள் எடுக்கப்படுவது அவசியமாகும்.

# பிரச்சனைகளும் கொள்கைகளும்...

**04** கடந்த பல ஆண்டுகளாக **தொடர்ச்சியாகக் காணப்படும் குறைந்த அரசிறைத் திரட்டல்கள்** இறைத் துறையிலும் பேரண்ட பொருளாதார சமநிலையற்ற தன்மையிலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படையக்கூடிய தன்மைகளை ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்து, **நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அரசிறை உருவாக்க** வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கான அவசியத்தினையும் தேவைப்படுத்துகின்றது.

**05** அரசாங்கத்தின் **நடுத்தர கால இறை இலக்குகளை** எய்துவது என்பது நிலையானதும் **நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதும், சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதுமான** கொள்கை வகுப்புக்களின் மீது தங்கியிருக்கிறது.

**06** கடந்த பல தசாப்தங்களாக நலிவடைந்த இறைத் துறைச் செயலாற்றத்தினால் தூண்டப்பட்ட **மத்திய அரசாங்கப் படுகடனின் சடுதியான உயர்வு**, இறைப் பக்கத்தில் முக்கிய பிரச்சனையொன்றாக தொடர்ந்தும் விளங்கி முதலீட்டாளர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் தரப்படுத்தல் முகவராண்மைகளின் கரிசனைகளை உயர்த்தின.

**07** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட பின்னடைவுகளின் பிடியில் நாடு இருப்பதனால் பொருளாதார மீட்சிச் செயன்முறையில் தரம் மற்றும் வினைத்திறன் நியதிகளில் **அரசாங்கத் துறை பணி வழங்கல்** முன்னொருபோதுமில்லாத அளவு மிகவும் முக்கியத்துவமிக்கதாகத் தோற்றம் பெற்றுள்ளது.

# பிரச்சனைகளும் கொள்கைகளும்...

**08**

நிதியிடல் வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கி உள்ளடங்கலாக **வங்கித்தொழில் முறைமை மீது அரசாங்கத்துறையின் மிதமிஞ்சித் தங்கியிருக்கின்ற நிலை,** மாற்றுவழி நிதியளித்தல் மூலங்களைக் கண்டறிதல் மூலமும் நீண்டகாலமாக செய்யப்படாதுள்ள அமைப்பியல் சார்ந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் குறைக்கப்படுவதன் மூலம் வங்கித்தொழில் முறைமையின் நிதியியல் வலிமையை மேம்படுத்துவதனை இயலச்செய்ய வேண்டும்.

**09**

**பணவீக்கத்தினை ஓர் இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் பேணுவதற்கும்** பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநாட்டுவதற்கும் மத்திய வங்கியின் முன்னெடுப்புக்களை நலிவடையச்செய்யும் **உணவுப் பணவீக்கத்தினால்** உந்துதலளிக்கப்பட்டு பொது விலை மட்டங்களில் அடிக்கடி ஏற்படும் தளம்பல் மற்றும் தொடருந்தன்மை உரிய நேரத்திலும் நிலைத்திருக்கக்கூடியதுமான அடிப்படையில் அரச தலையீடுகளினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

**10**

பொருளாதாரத்தின் **வலுப் பாதுகாப்பை** உத்தரவாதப்படுத்துகின்ற அதேவேளை, சாதகமான வெளிவாரி விளைவுகளை உருவாக்குகின்ற பொருளாதாரத்தின் **வளர்ச்சி தூண்டுனராக வலுவுடன் தொடர்புடைய அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளை** உறுதிசெய்வதுமான **முழுமையான திட்டமொன்றை** வகுப்பதற்கு இணைந்து பணிபுரிவதற்கான தேவை பொருளாதார துறையின் அனைத்து ஆர்வலர்களுக்கும் உள்ளது.

**11**

நோய்தொற்றிற்கு முன்னைய மட்டங்களில் இருந்து மீண்டு, உலகளாவிய பிரச்சினைகள் மற்றும் பண்ட விலை அசைவுகளிலிருந்தான இடர்நேர்வுகளை தாங்குவதற்கும் வளர்ச்சி மற்றும் பன்முகத்தன்மை உபாயங்களை உருவாக்குவதற்குமான **இயலுமையையும் தாக்குபிடிக்கும் தன்மையை** கட்டியெழுப்புவதற்குமான தேவை **ஏற்றுமதி கைத்தொழிலுக்கு** உள்ளது.

# பிரச்சனைகளும் கொள்கைகளும்...

12 நாட்டில் அத்தியாவசியமான பொருட்களின் கிடைப்பனவை நிச்சயப்படுத்தல், இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதி வருவாய்களை அதிகரித்தல் என்பவற்றிற்கு **வலுவான கைத்தொழில் கொள்கைகள் மற்றும் உபாயங்களைப்** பின்பற்றல் அவசியமாகும்.

13 **ஏற்றுமதித் துறைகள் சுதந்திர/முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்கள் மீது அதிகமாக தங்கியிருத்தலுக்கு அப்பால்** அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

14 **உயர்தர கல்விக்காக மாணவர்களின்** அதிகரித்த **புறப்படுகைகள்** மற்றும் குறிப்பிடத்தக்க உயர்ந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணிச் செலவினமென்பது **உள்நாட்டில் கிடைக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புப்** பற்றாக்குறையுடன் தொடர்புடைய சிக்கல்களை தீர்ப்பதற்கான அவசரத் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டுகிறது.

15 சுதந்திரத்திலிருந்து வேளாண்மைத் துறை உருமாறியிருந்த போதிலும் துறைசார் பணியாளர்களுக்கு ஆரோக்கியமான வருமான மட்டங்களை உருவாக்கும் இயலுமையுள்ள அதேவேளையில் **துறையின் ஒட்டுமொத்த வினைத்திறனை** மேம்படுத்தும் உணவு பாதுகாப்பு மற்றும் செயற்றிறனான சூழல்முறைமை முகாமைத்துவத்தினை நிச்சயப்படுத்துகின்ற **நிலைத்திருக்கக்கூடியதோர் வேளாண்மைத் துறையினை உருவாக்குவதற்கு இலங்கை தொடர்ந்தும் போராடுகிறது.**

16 பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்துகோலாக இருந்தபோதிலும் மேலும் வளர்ச்சிக்கான உள்ளாற்றலை கொண்டிருந்தபோதிலும், இலங்கையிலுள்ள **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள்** பல தடங்கல்களை எதிர்கொள்வதனால், இது **தேசிய மட்டத்தில் கொள்கை முன்னுரிமைகளை** தேவைப்படுத்துகிறது.

17 பல கொள்கை முன்னெடுப்புக்களுக்கு மத்தியிலும், கொவிட்-19 நோய்த்தொற்றினால் மேலும் அதிகரிக்கப்பட்ட **கழிவு முகாமைத்துவ விடயங்களுடன்** இலங்கை தொடர்ந்தும் போராடுகிறது.

18 இலங்கையின் தேசிய வளங்கள் சிறந்தமுறையில் பாதுகாக்கப்பட்டு மீளக்கட்டியெழுப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு **'பசுமை' அபிவிருத்தி** தொடர்பில் கவனம்செலுத்துவது முக்கிய சமகால தேவையொன்றாக காணப்படுகின்றதுடன் இதன்மூலம் பொருளாதாரம் **அதன் சூழல்முறைமையின் முழு வாய்ப்பையும்** அடைந்துகொள்ள முடியும்.

19 2030ஆம் ஆண்டளவில் **அனைத்து வகையான ஊட்டச் சத்துக் குறைபாடுகளையும் ஒழித்தல்** என்ற இலக்கை அடைவதற்கான நாட்டினுடைய முயற்சிகளுக்கு மத்தியில், நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டதற்கமைவாக, **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடனும்** வேளாண்மை பண்டங்களில் அவதானிக்கபட்ட **வழங்கல்பக்க அதிர்ச்சிகளுடன்** தொடர்புடைய அபிவிருத்திகளானது **இதுவரை அடையப்பட்ட பெறுபேறுகளைப் பாதித்து நீண்டகால தடைகளை உருவாக்கக்கூடிய** வேளையில் நீண்ட கால அபிவிருத்திக்கான தடைகளையும் ஏற்படுத்தும்.

**20**

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் அவதானிக்கப்பட்ட **பெண்கள் தொழிற்படை பங்கேற்பின் பெருமளவாக மந்தமடைந்த மட்டங்கள்** தொழிற்படையின் குறிப்பிடத்தக்க பகுதியொன்று பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகள் என்பவற்றிற்கப்பாற்பட்டுக் காணப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டி, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளிலிருந்து பொருளாதாரம் துரிதமாக மீட்சியடைவதுடன் **உயர்வான வளர்ச்சிப் பாதையொன்றுக்குள்** முன்னேற்றமடைவதற்கு முயற்சிக்கின்றமையால் **உடனடியான கவனத்தை** வேண்டி நிற்கின்றது.

**இப்பின்னணியில், முன்னோக்கிச் செல்லுகையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை எய்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை பேணுவதற்கு அமைப்பியல் ரீதியான சிக்கல்களை தீர்ப்பதுடன் எதிர்வரவுள்ள பாரதூரமான பொருளாதார விளைவுகளை முறியடிப்பதற்கும் ஓர் அவசரத்தன்மையுடன் பொருளாதாரத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கு அரச மற்றும் சகல ஆர்வலர்களினதும் ஒப்பிய முயற்சிகள் உடனடியான முன்னுரிமையான விடயமாகும்...**




1. பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம்
2. நடுத்தரகாலத்திலிருந்து நீண்ட காலம் வரை இலங்கையின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை அடைதல்
3. இறைத்திரட்சி : பேரின இறை உறுதிப்பாட்டிற்கான பாதை
4. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக ஊக்குவித்தல் மற்றும் சவால்கள்
5. இலங்கையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சிக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் வகிபாகம்
6. நிதியியல் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீது முறைசாரா பணமாற்றல்களின் தாக்கம்
7. வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள உபாயப்படுத்தல்
8. அண்மைய உலகளாவிய பணவீக்க நிகழ்ச்சிகளின் மீளாய்வு
9. கொவிட்-19 சலுகைகளும் காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியும்: சவால்களும் முன்நோக்கிய பாதையும்
10. இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்: “சிறந்த வாழ்க்கைக்காக சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்”
11. நிதியியல் தொழில்நுட்பத்தின் எழுச்சி: வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கான முன்னோக்கிய பயணம்
12. முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்

# நன்றி

# சி.கு 01 பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம்

- சென்மதி நிலுவை பிரச்சனைகளை அனுபவிக்கும் உறுப்பு நாடுகளில் அடிப்படை பிரச்சனைகளை சரிசெய்யும் அதேவேளை பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும், நாணயங்களை உறுதிநிலைப்படுத்துவதற்கும், இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் பொருளாதார வளர்ச்சியை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியமானதுவழக்கமாக அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடன்களைவழங்குகிறது.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதியளித்தல் ஏற்பாடொன்றின் கீழ் காணப்படும் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன நாட்டின் குறித்த பொருளாதார சூழ்நிலைகளை சார்ந்திருக்கின்றன.
- நாட்டு அதிகாரசபைகளுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை உறுதிப்பாடுகள் பொதுவாக முன்கூட்டிய நடவடிக்கைகள், கணியம்சார் செயலாற்றம் பிரமாணம், குறிகாட்டி இலக்குகள், அமைப்பியல் ரீதியிலான அளவிடல்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன:

### இலங்கைக்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் இடையிலான தொடர்பின் வரலாறு

- 1950இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றதிலிருந்து இலங்கையானது பதினாறு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.
- இலங்கைக்கான நிதியங்களின் முழு ஒதுக்கீட்டையும் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பது 2009இல் மிகவும் வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டமாக காணப்பட்டது.
- முன்னைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக வெளிநாட்டு ஒதுக்குகளை மேம்படுத்துதல் மற்றும் நாணயக் கொள்கையை மேற்கொள்ளுதல் தொடர்பில் கவனம்செலுத்தின.
- எரிபொருள் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்துதல், மத்திய வங்கி சுயாதீனமாக செயற்படுவதை மேம்படுத்துதல், நெகிழ்வான செலாவணி வீதக் கொள்கை மற்றும் அரசிறை அடிப்படையிலான இறைத்திரட்சி உள்ளிட்ட முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்பட்டன.
- 2016இன் விரிவாக்கப்பட்ட நிகழ்சித்திட்டத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அரசிறையில் ஏற்பாட்ட குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் காரணமாக இறை இலக்குகளை இலங்கை அடைய முடியாமலிருந்தாலும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் கணிசமான முன்னேற்றத்தினை காண்பித்தன.
- 2009இல் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - துணைநில் ஏற்பாட்டு நிகழ்சித்திட்டம் ஒன்றைத் தவிர நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகள், தேறிய உள்நாட்டு நிதியிடல் , ஒதுக்குப் பண குறிகாட்டி இலக்குகள் மற்றும் அமைப்பியல் ரீதியான அனைத்து அளவிடல்கள் போன்றவற்றை இலங்கை நிறைவுசெய்தது.
- பன்னாட்டு நாணய நிதியமானது பல தொழில்நுட்ப ரீதியிலான உதவி வாய்ப்புக்களை இலங்கைக்கு விரிவுபடுத்தியுள்ளது.
- பல நிகழ்ச்சித்திட்டங்களின் பங்காளராக இருந்தபோதிலும், அதிகாரிகளினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் காணப்பட்ட ஈடுபாடின்மையே குறிப்பாக கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்புடையவையே இதற்கு காரணமாக அமைகின்றது.

### இலங்கை மீது எதிர்கால பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் தாக்கங்கள்

- தற்போதைய சூழ்நிலையில், சவால்மிக்க பொருளாதார நிலைமைகளை எதிர்கொள்வதற்கு பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டமொன்று முக்கியமானதாக காணப்படும்
- பன்னாட்டு ஒதுக்குகளின் தற்போதைய குறைந்த மட்டத்துடன், கணிசமான உயர் படுகடன் மீள்கொடுப்பனவுகளை குறுகிய காலத்தில் செலுத்தவேண்டியது பெரும் சவால்மிக்கதாக அமையும்.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பது மேலதிக நிதியிடலுக்கான அணுகலை மாத்திரம் வழங்குவதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்துவதற்கும் இயலுமாகயிருக்கும்.
- பேரண்டப்பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் இணைந்து ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இது படுகடன் அல்லாத நிதியியல் உட்பாய்ச்சல்களை மேலும் ஊக்குவிக்கும்.
- பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கலந்துரையாடலில் கவனம்செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படக்கூடிய சில முக்கிய வழிமுறைகளில் இறைத்திரட்சி, இறுக்கமான நாணயக்கொள்கை நிலைப்பாடு, செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை, நாணய நிதியிடலை படிப்படியாக நிறுத்துதல், அரசுக்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளை சீர்த்திருத்துதல் போன்றவை உள்ளடங்கும்.
- பொருளாதாரத்தில் இப்பேரண்டப் பொருளாதார உறுதிப்படுத்தல் வழிமுறைகள் பொருளாதாரத்திற்கு கடினமான சீராக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும் தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இது கட்டாயமாகிவிட்டது
- இலங்கையானது பொருத்தமான வழிமுறைகள் மூலம் வெளிநாட்டுப் படுகடனை நிலையான முறையில் முகாமை செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.
- படுகடன் கடப்பாடுகளின் ஒழுங்கானதும் ஒத்திசைவானதுமான மீள்கட்டமைப்பில் இடைக்காலமொன்றிற்காக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவின் இடைநிறுத்தலை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வெற்றிகரமான பேச்சுவார்த்தையை நடாத்தி நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தொடர்புடைய அனைத்து ஆர்வலர்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின் மூலம் அரசியல் மற்றும்சமூக உறுதிப்பாட்டை அடைந்துகொள்ள வேண்டும்.

# சி.கு 02 நடுத்தரகாலத்திலிருந்து நீண்ட காலம் வரை இலங்கையின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை அடைதல்

- உலகளாவிய நோய்த்தொற்றினாலும் உலகளாவிய பொருளாதாரத்திலுள்ள பாதகமான அபிவிருத்திகளாலும் எழுகின்ற சிக்கல்களுடன் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது அண்மைய ஆண்டுகளாக முன்னெப்போதுமல்லாத சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது.
- நிலைபெறத்தக்க வெளிநாட்டு படுகடன் நிலைமையாலும் முகாமைசெய்யக்கூடிய நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையாலும் வகைப்படுத்தப்படும் வெளிநாட்டுத் துறையிலுள்ள நீண்ட கால உறுதிப்பாட்டை நோக்காக கொண்டு கொள்கைகளை உருவாக்குதல் என்பது முக்கியத்துவம்வாய்ந்ததொன்றாகும்.

## வெளிநாட்டுத்துறை: நடைமுறை நிலைமைகளும் பிரச்சினைகளும்

1. கடுமையான உயர் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகள்
2. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் உலகளாவிய கொவிட்-19 நோய்த்தொற்று என்பவற்றுடன் நடைமுறைக் கணக்கு மீதான பாதகமான விளைவுகள்
3. நிதியியல் கணக்கில் தாழ்வான செயலாற்றம்
4. ஏற்றமடைகின்ற வெளிநாட்டு படுகடன்
5. வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
6. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைதல்
7. செலாவணி வீதம் மீதான கணிசமான அழுத்தம்

### உறுதிப்பாட்டை மீளஅடைவதற்கான குறுங்கால வழிமுறைகள்

1. மத்திய வங்கியும் அரசாங்கமும் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டன
   (அ) உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கும்
   (ஆ) தொழிலாளர் பணவனுப்பல்களை அதிகரிப்பதற்கு
   (இ) வெளிநாட்டு நிதியியல் உதவியை பாதுகாப்பதற்கு

### நடுத்தர கால வழிமுறைகள்

1. பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கபட்ட பொருளாதார சீராக்கச் செயற்றிட்டமொன்றுடன் ஒத்திசைகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்புக்களை ஆரம்பித்தல்
2. வெளிநாட்டுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நிச்சயப்படுத்துவதற்கான தேவை
3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் ஆரோக்கியமான மட்டங்களைப் பேணுதல்
4. பிராந்திய ஒத்துழைப்பினை வலுப்படுத்தல்

### நீண்ட கால வழிமுறைகள்

1. படுகடனல்லாத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்தல்
   (அ) வணிகப்பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகள் துறைகளை ஊக்குவித்தல்
   (ஆ) தொழிலாளர் பணவனுப்பல்களை மேம்படுத்தல்
   (இ) வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல்

# சி.கு 03 இறைத்திரட்சி : பேரின இறை உறுதிப்பாட்டிற்கான பாதை

உலகளாவிய நோய்தொற்று இலங்கையை கடுமையாக பாதித்த போதிலும், தற்போதைய பலவீனமான இறை நிலை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பேரண்டப் பொருளாதார பிரச்சினைகள் என்பன முழுமையாக நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக ஏற்பட்டவையல்ல. மாறாக, அவை இறைத் துறையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற பிரச்சனைகளின் பிரதிபலிப்பாகும்.


பலவீனமான இறை நிலைமைகளில் இருந்து வெளிப்படுத்தப்படும் கடுமையான பேரண்டப் பொருளாதாரசமமின்மைகளை கருத்திற்கொண்டு, நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட இறைத்திரட்சி வழிமுறைகள் இலங்கைப் பொருளாதாரத்திற்கு மிகவும் நன்மை பயக்கத்தக்கதாக அமையக்கூடும்.

**முன்னோக்கிய பயணம்**

- சிறிய இறைப் பெருக்கிகளைக் கொண்ட இறைக் கருவிகளைப் பயன்படுத்தி, "வளர்ச்சிக்கு உகந்த" முறையில் இறைத்திரட்சி வழிமுறைகள் வடிவமைத்தல்.
- வரி தளத்தை விரிவுபடுத்தல், மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி அல்லது தனியாள் வருமான வரி வீதங்கள் என்பவற்றை அதிகரித்தல், வரி நிருவாகத்தை இலகுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஊக்கு தொகை நிகழ்ச்சித் திட்டங்களை இலக்கிடுகின்ற அதேவேளை, புதியஅரசாங்க வேலைக்குச் சேர்த்தல் மற்றும் சம்பள மீள்திருத்தங்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருத்தல்
- செலவுகளைக் குறைப்பதைவிட 'பணத்திற்கான பெறுமதி' ஊடாக கணிசமான மூலதனச் செலவினங்களை அடைதல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் முதலீடுகள் மற்றும் நீண்ட காலம்கடந்த கட்டமைப்பு சீர்திருத்தங்கள்→ கிரயத்தை பிரதிபலிக்கின்ற பொறிமுறைகள், வினைத்திறனான பெறுகைகளுக்கான நிறுவன ரீதியான மீள்கட்டமைப்பு மற்றும் சந்தையை நோக்காக கொண்டு பொருட்களையும் பணிகளையும் வழங்கல் போன்ற அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள்
- இறைத் திரட்சியின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு சட்டவாக்க மற்றும் நிருவாக சீர்திருத்தங்கள்

# சி.கு 04 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக ஊக்குவித்தல் மற்றும் சவால்கள்

- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அத்தகைய பாரிய நிறுவனங்கள் வளர்வதற்கான நன்னிலமாகத் தொழிற்படுவதன் மூலம் முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதன் வாயிலாக வழங்கல் சங்கிலியை விரிவுபடுத்துவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வியாபாரம் மேம்படுத்தப்படுகிறது.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளானா் குடித்தொகையில் பெரும் பங்கினருக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் இது பொதுமக்களின் செலவிடல் சக்தியை அதிகரித்து, நுகர்வினைத் தூண்டி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் உத்வேகப்படுத்துகிறது.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சமூகக் கொத்தணியின் அனைத்து வடிவங்களிலும் பரந்து காணப்படுவதுடன், குறைந்த வருமான குடும்பங்களின் வருமான மட்டங்களை அதிகரிப்பதற்குப் பங்களித்து இதன்மூலம் வருமானப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைவடையவும் பங்களிக்கின்றது.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளானது அவற்றின் தொடர்புடைய சூழலில் போட்டித்தன்மையை உருவாக்கலாம் என்பதுடன் புதிய புத்தாக்க யோசனைகளை ஊக்குவிக்கும்.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளானது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவதில் முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருப்பதுடன் அதன் வாயிலாக முதலீட்டாளா் மனோபாவத்தினை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு மறைமுகமான பங்களிப்பொன்றை ஆற்றுகிறது
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொருளாதாரமொன்றின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை குறிப்பிட்டளவிற்கு மேம்படுத்த முடியும்.






- நிதியினை அணுகுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வசதி
- மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரத் தேர்ச்சி மற்றும் முக்கிய ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருக்கும் இயலாற்றல்:
- ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகள் மற்றும் முரண்பாடான கொள்கைகள்
- குறைந்த சந்தைப் பங்கு மற்றும் சந்தையை அணுகும் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான போதுமானதற்ற தகவல்கள் மற்றும் தரவுகள்
- உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமும் ஏனைய நிகழ்வுகளும்
- பால் அடிப்படையிலான சமமின்மைகள்

## உபாயங்கள்

- நிதியிடல் இடர்ப்பாடுகளைக் கட்டுப்படுத்தல்:
  - *கொடுகடன் உத்தரவாத திட்டங்கள்*
  - *வங்கிகளை அபிவிருத்திசெய்தல்*
  - *கொள்கை சார்ந்த கடன்வழங்கல்*
  - *மாற்று ஏற்பாடு நிதியியடல்*
  - ...
- ஆதரவளிக்கின்ற வெற்றியாளர்கள்
- கொத்தணிப்படுத்தல் மற்றும் இணைப்புக்களை மேம்படுத்தல
- இலக்கிடப்பட்ட ஆதரவு:
  - *முன்னுரிமைப்படுத்தல்*
  - *துகவல் தொழில்நுட்ப பயன்பாட்டை மேம்படுத்தல்*
  - ...



# சி.கு 05 இலங்கையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சிக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் வகிபாகம்

- உள்ளீடுகளுக்கான வெளிப்பாய்ச்சல்கள் குறைந்தளவில் காணப்படுகின்றமையினால் தேறிய வெளிநாட்டு நாணய வருவாய்களின் முக்கிய மூலமொன்றாக சுற்றுலாத்துறை திகழ்கின்றது. பொருளாதார வளர்ச்சி, தொழில்வாய்ப்பு மற்றும் பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வில் குறைப்பு என்பவற்றிற்கும் சுற்றுலாத்துறை பங்களிக்கிறது.
- 2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய வருவாய்களின் மூன்றாவது மிகப்பெரும் மூலமாக சுற்றுலாத்துறை காணப்பட்டதுடன் 2018 வரை நிலையாக வளர்ச்சியடைந்தது
- 2018இல் ஆடைகள் இறக்குமதி, தேயிலை, இறப்பர் உற்பத்திகள் போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதிகளை விட சுற்றுலாத்துறை வருவாயை ஈட்டியது. தொழிலாளர் பணவனுப்பல்கள் பாரியளவில் காணப்பட்டாலும் வீழ்ச்சியடைந்துள்ளன.
- தொடர்ச்சியான வாத்தக பற்றாக்குறைகள் மற்றும் வெளிநாட்டு நாணய படுகடன் சுமை என்பவற்றிலிருந்தான தற்போதைய வெளநிாட்டுத்துறை அழுத்தங்களின் காரணமாக, சுற்றுலாத்துறையானது பொருளாதாரத்தின் தாக்குபிடிக்கும்தன்மையைப் பேணுகின்ற முக்கிய வகிபாகத்தினைக் கொண்டுள்ளது.

- 2019 வரை உலகளாவிய சுற்றுலாத்துறை திடமாக வளர்ந்து வந்தது.
- 2024இல் சுற்றுலாத்துறை 2019இன் மட்டம் வரை உயரும்
- பயணம் செய்வதற்கான அதிகளவான அவாக்களும் உயர்வடைந்த சேமிப்புக்களும்
- பேரண்டப்பொருளாதார பிரச்சனைகளைக் கொண்ட சிறிய நாடுகள் சுற்றுலாத்துறையிலேயே தங்கியுள்ளன - பன்னாட்டு நாணய நிதியம்.

### "புதிய இயல்பு நிலை" யுகத்தில் சுற்றுலாத்துறை

- நல மற்றும் சுகாதார வழிமுறைகளின் முக்கியத்துவம்
- உயர் அடர்த்தியான சுற்றுலாத்துறையை பதிலீடு செய்கின்ற சமூக அளவு தூரமான சுற்றுலாத்துறை.
- ஏராளமான பயணிகள் X மற்றும் Y (இளைஞர்) வயதினர் ஆவார்
- தங்குமிடம் மற்றும் செலவிடும் நீளம் அதிகரித்துள்ளன..
- இறுதி நேர ஒதுக்கீடு மற்றும் இரத்துச் செய்தல்
- டிஜிட்டல் நடமாடும் தங்குமிடம்
- தனிப்பட்ட நலம் மற்றும் உளச் சுகாதாரத்தில் ஆர்வம்
- இயற்கை சூழலில் அதிக கவனம்

### முன்னோக்கிய பாதை

சுற்றுலாக் கொள்கை அமைச்சரவை ஒப்புதலிற்காக காத்துக்கொண்டிருக்கின்றது. 2022-2025 இற்கான உபாய செயற்பாட்டுத் திட்டம் கிடைப்பனவாகவுள்ளது. பின்வருபவை மேலும் வலியுறுத்தப்படுகின்றது

- சுற்றுலாத்துறை புதிதாக தூண்டுபவர்களை வெளிப்படுத்தல் - கல்வி, சுகாதாரம்,
- இயற்கையை பாதுகாத்தல் - இயற்கைகாட்சிசார்ந்த தளங்கள் பாதுாக்கப்பட்ட இடங்கள், ஒலி மாசடைவற்ற, விலங்கு நலம்சார்ந்த இடங்களை உருவாக்குதல்
- தனிப்பட்ட சுற்றுலாப்பயணியின் பயணம் மற்றும் கரிசனைகளில் கவனஞ்செலுத்தல்
- இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் பாரியளவான பயன்பாடு – தகவலை வழுங்குவதற்காக, குறைவாக பயணிக்கும் இடங்களுக்கு சுற்றுலாப்பணயிகளை நெறிப்படுத்தல், தொடர்பற்ற கொடுப்பனவு தெரிவுகள்.
- தகவல் வலையமைப்பை மேம்படுத்தல்- சுற்றுலா சென்மதி கணக்கீடு மற்றும் சந்தை ஆய்வு இயலாற்றல் அதிகாரசபை.
- நிதியியல் நிறுவனங்கள் மீதான சுற்றுலாத்துறையின் விளைவை முகாமை செய்தல்
- துறையினுள் முறைசாரத்தன்மையினை குறைத்தல்
- சுற்றுலாத்துறை பயணிகளுக்கு மத்தியில் பன்முகத்தன்மையை ஊக்குவித்தல்
- ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தி சுற்றுலாத்துறை மீது தங்கியிருத்தலை படிப்படியாகக் குறைத்தல்

# சி.கு 06 நிதியியல் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீது முறைசாரா பணமாற்றல்களின் தாக்கம்

- முறைசாரா பண மாற்றல் மார்க்கங்கானது ஹவாலா, உண்டி அல்லது உண்டியல் போன்ற பணிகளை வழங்கும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத சந்தைகளின் பணிவழங்குநர்களை உள்ளடக்குகிறது. பெரும்பாலான நாடுகளின் பணவனுப்பல் பணிகளை ஆற்றுவதற்கு இவர்களுக்கு உரிமம் வழங்கப்படுவதில்லை.
- ஒழுங்குமறைப்படுத்தல் கட்டமைப்பு இன்மை, நிதியங்கள் கிடைக்கின்ற மூலங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு போன்றவற்றில் கவனப் பற்றாக்குறை, அத்துடன் சட்ட நடைமுறைகளை முன்னெடுப்பதில் உள்ள கடினம் போன்ற காரணமாக பணம் தூயதாக்குவோர் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் இதனை தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதனால் ஹவாலா/உண்டியல் போன்ற மார்க்கங்கள் அதிகளவிற்குப் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டுள்ளது.
- எனவே, இத்தகைய மார்க்கங்களானது நாட்டின் நிதியியல் முறைமைகளையும் பொருளாதார நடவடிக்கைகளையும் மிதமாக தொழிற்படுத்துவதற்கு தீங்கு விளைவிக்கலாம். சிறப்புக் குறிப்பில் கலந்துரையாடப்பட்ட சில தாக்கங்கள் பின்வருமாறு :

## பொருளாதாரம் மீதான ஹவாலாவின் / உண்டியலின் தாக்கம்

- குறைந்த வரி வருமானம்
- குறைத்துக் காட்டப்பட்ட சென்மதி நிலுவை
- குறைந்தளவிலான வெளிநாட்டு ஒதுக்குகள்
- பணத்திற்கான கேள்வியின் உறுதிப்பாடின்மை
- வினைத்திறனற்ற நாணயக் கொள்கை
- துடைசெய்யப்பட்ட வங்கித்தொழில் முறைமைகள்
- தேசிய பாதுகாப்பிற்கான அச்சம்

- அண்மைய கடந்த காலத்தில் இலங்கைச்சந்தையில் அத்தகைய நடவடிக்கைகளின் விரிவாக்கத்தையும் பொருளாதாரத்திற்கான சாத்தியமான தாக்கத்தையும் கருத்திற் கொண்டு பின்வருகின்ற நடவடிக்கைகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
  - பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகத்தினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வு தொடர்களை நடாத்துதல் (கலந்துரையாடல்கள், பொது அறிவித்தல்கள், விளம்பரங்கள், கட்டுரைகள்)
  - ஹவாலா அல்லது உண்டியல் கொடுக்கல்வாங்கல்களிருந்து எழுகின்ற நிதியங்களை கைப்பற்றி அத்தகைய நிதியங்களின் மூலங்களுக்கான உண்டியல் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரசபை விசாரணைகளை மேற்கொள்தல்
  - முறைசார்ந்த வழிகளினூடாக வருவாய்களை ஈட்டுவதற்கு வெளிநாட்டு தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கான நிதியியல் ஊக்குதொகைளை அறிமுகப்படுத்தல்
- பன்னாட்டு அனுபவத்திற்கமைவாக, உரிமம்அல்லாமல் இத்தகைய நடவடிக்கைளில் ஈடுபடுவதன் மீதான தடைகள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பன்னாட்டு தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் சட்டவாக்கங்களினூடாக பதிவுசெய்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைளுக்கான தேவைப்பாடுகளை விதித்தல், அத்துடன் பிரதேச ரீதியாக முறைசார்ந்த வங்கித்தொழில் வழிகளின் விரிவாக்கம் போன்றவை பொருளாதாரத்திற்கான ஹவாலா போன்ற முறைசார பண மாற்றல் வழிகளினூடாக கடுமையான பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளபட்ட நடடிவக்கைகளாகும்.
- ஹவாலா போன்ற முறைமைகளை வடிவமைப்பதற்கு பொருத்தமான சட்ட கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கான தேவை இலங்கையில் அடையாளம காணப்பட்டு வருவதுடன் அதிகாரசபைகள் இத்தேவையை நோக்கி தொழிற்பட்டு வருகின்றனர்.

# சி.கு 07 வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள உபாயப்படுத்தல

கடந்த மூன்று சதாப்த காலத்தில்,
**தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தனியார் மயப்படுத்தலுக்கும் தேசிய மயமாக்கலுக்குமிடையிலான முயற்சிகளுக்கிடையில்மாறிவந்தன.**
**நானூறுக்கும் மேற்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்** வலு,சக்தி, நிதி மற்றும் காப்புறுதி, நீர், விமானப் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி அத்துடன் இன்னும் பல விடயங்கள் உள்ளிட்ட முக்கியமான துறைகளில் **செயற்படுகின்றன.**

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் கணிசமானளவு பேரண்டப் பொருளாதார தாக்கங்களைக் கொண்ட பாரிய இறைச் சுமையினைக் கொண்டனவாக மாறியுள்ளன.**






- செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் கொள்கைகள்
- உபாய நெறிப்படுத்தல்களை மேம்படுத்தல்
- நிதியியல் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் அதிகரித்தல்
- கம்பனி ஆளுகையினை வலுப்படுத்துதல்

# சி.கு 08 அண்மைய உலகளாவிய பணவீக்க நிகழ்ச்சிகளின் மீளாய்வு

- பல காரணங்களினால் உலகளாவிய அதேபோன்று உள்நாட்டு ரீதியாக உயர்ந்த பணவீக்க நிகழ்ச்சிகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் பணவீக்கம் கீழ் நோக்கிய போக்கொன்றை பொதுவாகக் காண்பித்துள்ளது.
- பண்ட விலைகள், பிரதானமாக எண்ணெய் மற்றும் உணவு, உள்நாட்டு ரீதியாக விலைக் கட்டுப்பாட்டை அகற்றல், வழங்கல் குறைபாடுகள், அடக்கி வைக்கபபட்ட கேள்வி, கொள்கை வழுக்கள், மற்றும் கொவிட் 19இல் வழங்கல் சங்கிலியின் இடையூறுகள் என்பவை உலகளாவிய உயர் பணவீக்க நிகழ்வுகளிற்கான காரணங்களால் அதிகரிக்கப்பட்டன.
- பிரபல்யமான அரசியல் கலாச்சாரம், உயர்ந்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறைகள் மற்றும் மத்திய வங்கி மூலமான பற்றாக்குறை நிதியிடல், உயர்வான அரசாங்க செலவினம், உயர் இராணுவ செலவினம், தாழ்ந்த உற்பத்தித்திறன், அடிக்கடி நிலவும் வானிலை அதிர்ச்சிகள், பொருளாதார முகவர்களால் எதிர்பார்க்கப்படும் தொடர்ச்சியான பணவீக்கம், மிகையான பண நிரம்பல் மற்றும் செலாவணி வீதம் போன்றவற்றின் காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் அல்லது வளர்ந்து வரும் சந்தைகளில் உயர்வான பணவீக்கம் தொடர்ந்தும் நிலவுகின்றது.
- கொள்கை பதிலிறுப்பபுக்களிற்கு மத்தியில் உயர்வான பணவீக்க அழுத்த நிகழ்வுகளை தீர்ப்பதற்கான பதிலிறுப்புக்களாக அரசாங்கத்தினால் பொருத்தமான இறைக்கொள்கைளுடன் இறுக்கமடைகின்ற நாணயக் கொள்கை, விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் உதவுதொகைகள், வெளிப்படையான மற்றும் சுயாதீனமான மத்திய வங்கித்தொழில், பணமாற்றல் போன்ற பாதுகாப்பான தேறிய தலையீடு, இறைவிதிகள் உள்ளடங்கலாக எதிர்சுழற்சி கொள்கைகளின் வினைத்திறன்மிக்க பயன்பாடு போன்றவை காணப்படுகின்றன.

**உலகளாவிய பணவீக்கம்**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

# சி.கு 09 கொவிட்-19 சலுகைகளும் காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியும் : சவால்களும் முன்னோக்கிய பாதையும்

## ① அறிமுகம்

- இலங்கை மற்றும் உலகளாவிய பொருளாதாரங்கள் என்பவற்றால் முகங்கொடுக்கப்படும் கொவிட் -19 சவால்களும் இன்னலகளும்

## ② இலங்கை மத்திய வங்கி உள்ளடங்கலாக மத்திய வங்கிகளால் வழங்கப்படும் சலுகைகள்

- இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்படும் நிவாரணப் பொதிகள்
- காலம் தாழ்த்தி கடனைச் செலுத்துவதற்கு அப்பால் உள்ள நிவாரணம்
- வேறு மத்திய வங்கிகளால் அறிமுகப்படுத்தப்படும் நிவாரணப் பொதிகள்
- ஏன் வட்டி? வட்டியின்றி படுகடன் நிவாரணத்தை எம்மால் அறிமுகப்படுத்தவியலாதுள்ளதா?

## ③ நிதியியல் நிறுவனங்களுக்கான சவால்கள்

- அதிகரிக்கின்ற செயற்படாக் கடன்கள் மற்றும் வேறு முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் மீதான தாக்கம்
- திரவத்தன்மையை முகாமைசெய்தல் மற்றும் அவற்றின் படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை மதித்தல்
- மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை முகாமைசெய்தல் மற்றும் அத்தியாவசிய பணிகளை வழங்குதல்
- வியாபாரத் திட்டங்கள், உபாய நெறிப்படுத்தல் என்பவற்றிற்கான மாற்றங்கள் மற்றும் முன்னுரிமைகளை மீள ஒழுங்கமைத்தல்

## ④ காலம்தாழ்த்திச் செலுத்துதலை விளைவற்றதாக்குதல்

- காலம் தாழ்த்திச் செலுத்துதல் என்பது பொருளாதாரமொன்றிற்கு ஏன் மிகவும் விரைவானதாகவோ அல்லது தாமதமாகவோ உள்ளது?
- நிவாரண பொதிகளை விளைவற்றதாக்கும் போது, எவ்வாறு அனைத்து ஆர்வலர்களினதும் கரிசனைசெய்யப்பட்ட எதிர்பார்க்கைகளை சமநிலைசெய்து முகாமை செய்வது?

## ⑤ காலம் தாழ்த்திச்செலுத்துதலுக்கு அப்பால் உள்ளது என்ன?

- புதிய வாழ்க்கை முறையையும் வியாபார இயலுமைகளையும் அடிப்படையாக கொண்டு கடன்களை மீளக்கட்டமைத்தல்
- தமது வியாபார மாதிரிகள்- புதியவியாபார வாய்ப்புக்கள், வினைத் திறனை அதிகரித்தல், மீளமூலதனமாக்கல், மாற்று/ தாழ்வான நிதியியல் முறைமைகள் என்பவற்றை மீள சிந்திப்பதற்கு நிறுவனங்களையும்(கடன்பாட்டாளர்கள்) வங்கிகளையும்(நிதியியல் நிறுவனங்கள்) ஊக்குவித்தல்
- சாத்தியமான வியாபாரத்தின் மீட்சிக்கான பங்குரிமை மூலதன நிதியிடல்

## ⑥ முன்னோக்கிய பாதை அனைத்தையுமுள்ளடக்கிய, நீடித்துநிலைத்திருக்கத்தக்க மீட்சி மற்றும் வளர்ச்சி

- உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து கற்றறிய்பட்ட பாடங்களை பிரதிபலித்து வியாபாரத்தை பசுமையாக்குவதற்கு நீண்ட காலம்கடந்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பாக உலகளாவிய நோய்த்தொற்றை பயன்படுத்தல்.
- மனிதனால் உருவாக்கப்பட்ட மற்றும் இயற்கை பேரழிவுகளை முகங்கொடுப்பதற்கு தயாராகவும் தாக்குபிடிப்பதற்கும் நிதியியல்துறையையும் கடன்பாட்டாளர்களையும் உருவாக்குதல்
- நோய்த்தொற்றுக்கு பின்னரான அனைத்தையுமுள்ளடக்கிய மீட்சிக்காக உள்நாட்டு, சமூக தலைமையிலான, பெண்கள் தலைமையிலான, பசுமையான மற்றும் சமூகம் சார்ந்த தொழில்முயற்சிகளை ஆதரவளித்தல்.

# சி.கு 10 இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்: "சிறந்த வாழ்க்கைக்காக சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்"

- இலங்கையிலுள்ள அனைத்து தனிநபர்களும் தொழில்முயற்சிகளும் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்ய கூடியதும் வாழ்க்கைத் தரத்தை மாற்றக்கூடியதுமான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் என்பதையும் அவை உயர்ந்த தரத்தில் பொருத்தமானவாறு பாதுகாப்பானதாக கிடைக்கக் கூடியவாறு சமமாக அணுகக் கூடியதாக உள்ளன என்பதையும் உறுதிசெய்வதற்கும் இலங்கையில் நிதியியல் வசதிற்குட்படுத்தலை அடைவதற்காக நீண்ட கால, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைந்த உபாயமொன்றை கொண்டு நடாத்துவதற்கும் முதன்முறையாக அனைத்து முக்கிய ஆர்வலர்களையும் ஒன்றினைத்து தேசிய நிதியியல் வசதிற்குட்படுத்தல் உபாயம் இலங்கை மத்திய வங்கியால் 2021 மாச்சு அன்று அறிமுகப்படுத்தப்பட்டது

## முக்கிய கொள்கை விடயங்கள்.

- இலத்திரனியல் நிதி மற்றும் கொடுப்பனவுகள்
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் நிதி
- நுகர்வோர் பாதுகாப்பு
- நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்

## குறிக்கோள்கள்

- நாட்டில் நன்கு நிறுவப்பட்ட டிஜிட்டல் நிதியியல் மற்றும் கொடுப்பனவுகளின் கிடைப்பனவு
- பொருத்தமானதும் பெற்றுக்கொள்கக்கூடியதுமான நிதியியல் சாதகனங்கள் மற்றும் பணிகளை அணுகுவதில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகள் மூலம் முகங்கொடுக்கப்படும் இடர்வுகளை அகற்றுதல்
- நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு உயர்வையும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் பாதுகாப்பையும் பாதுகாப்பதற்கான நன்கு வடிவமைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்துக் கட்டமைப்பு மற்றும் வழிமுறைகள்
- நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு உயர்வையும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் பாதுகாப்பையும் அதிகரிப்பதற்கான தனிநபர்கள் மற்றும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்றி என்பவற்றிற்கு மத்தியில் உயர்ந்தமட்டத்திலான நிதியியல் எழுத்தறிவு

## எதிர்பார்க்கப்படும் தாக்கம்

- செலவு வினைத்திறன் மற்றும் டிஜிட்டல் நிதியியல் பணிகள் சாத்தியமான வழங்கல் என்பவற்றிற்கு வசதியளிப்பதற்கு நன்கு கடத்தக்கூடிய ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல் மற்றும் அத்தியாவசிய டிஜிட்டல் உட்கட்டமைப்பு
- வருமானத்தை ஈட்டுவதனூடாகவும் அதிகளவான முறைசார்ந்த வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதனூடாவும் மேலதிகமாக வினைத்திறனாக செயற்படுவதற்கு நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் அணுகுவதை அதிகரித்தல்
- நுகர்வோரின் நலன்களை ஊக்குவிப்பதற்கு அனைத்து வகையான நிதியியல் பணி வழங்குநர்களின் வலுப்படுத்தப்பட்ட சந்தை நடாத்துகை
- இலங்கையர்கள் தமது அடிப்படை நிதியியல் தேவைகளை வினைத்திறனாக முகங்கொடுப்பதில் அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்துகின்ற நிதியியல் எழுத்தறிவு, திறன்கள் மற்றும் நுகர்வோர் பழக்கவழக்கம் என்பவற்றிற்கான விரிவான உரிமை

# சி.கு 11 நிதியியல் தொழில்நுட்பத்தின் எழுச்சி: வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கான முன்னோக்கிய பயணம்

**①**

**அறிமுகம்**

- மேலதிக போட்டித்தன்மை, அதிகரித்த செயற்றிறன், குறைந்த இடையீட்டுக் கிரயம் என்பவற்றை அனுமதிக்கும் விதத்தில் மரபார்ந்த வங்கித்தொழிலிற்கான சவாலாக நிதியியல் தொழில்நுட்பத்தின் எழுச்சி
- பின்னைய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்கு தொழிநுட்பம், தரவு ஆளுகை மற்றும் வங்கித்தொழில் மேற்பார்வையாளர்களுக்கான தேவை என்பவற்றின் மீதான இடர்நேர்வுகளின் தோற்றத்திற்கான சாத்தியப்பாடு

**②**

**மரபுசார் வங்கித்தொழில் முறைமையை பாதிக்கக்கூடிய நிதியிடல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள்**

- வங்கித்தொழிலைத் திறத்தல் (மூன்றாம் தரப்பினர் தளங்களினூடாக வங்கித்தொழிலை நீடித்தல்), மெய்நிகர் வங்கித் தொழில்(கிளையற்ற வங்கித்தொழில்) மற்றும் டிஜிட்டல் நாணயங்கள்
- திறந்த மற்றும் எச்சரிக்கையான ஒழுங்குமறைப்படுத்தல் அணுகுமுறையை பின்பற்றுவதற்கான தேவைப்பாடு மேற்பார்வைத் தொழில்நுட்பத்துடன் பயன்படுத்துவதற்கு மேற்பார்வையாளர்களுக்கான தேவைப்பாடு

**③**

**வங்கித்தொழில் மேற்பர்வையாளர்களுக்கான மேற்பார்வை தொழில்நுட்ப இயலாற்றல்கள்**

- மேற்பார்வை தகவல் முறைமைகள், மேம்படுத்தப்பட்ட தரவுப் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட விரைவான எச்சரிக்கை சமிஞைகள், தவறான நடத்தை மற்றும் நிதியியல் குற்றங்களை இணங்கான்பதற்கான மேற்பார்வை இயலாற்றல், பொதுவான மற்றும் தனிப்பட்ட கட்டமைக்கப்படாத தரவுகளிலிருந்து மேற்பார்வை நுண்ணறிவின் உருவாக்கத்திற்கான செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு.

**④**

**இலங்கை மத்திய வங்கியால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள்**

- தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும் தன்மை மீதான ஒழுங்குமறைப்படுத்தல் கட்டமைப்பு அத்துடன் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் தரவுப் பகிர்வு தொடர்பான சாத்தியப்பாட்டு எண்ணக்கரு.